258இ எம் வின்செண்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் ஸ்ரீலங்கா Youth Focus Corporate விருதை வென்றுள்ளது

*New Generation Awards 2022 நிகழ்வில் இலங்கையில் இளையோரை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்புக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது*

**கொழும்பு, 2022, டிசம்பர் 12:** யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம், 2021-2022 காலகட்டத்தில், ஒரு கூட்டாண்மை நிறுவனமாக, நாட்டில் இளையோர் மத்தியில் மிகப் பெரிய நல்விளைவை ஏற்படுத்தியமைக்காக, New Generation Awards 2022 நிகழ்வில், Youth Focus Corporate விருதை அண்மையில் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து, New Generation Chapter of Women in Management (WIM) ஆனது இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் வழங்கப்பட்ட ஒரே கூட்டாண்மை நிறுவன விருது வகை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

New Generation Awards என்பது இளம், திறமையான இலங்கையர்களை அடையாளம் கண்டு, வளர்ப்பதற்கும், அவர்களை பண்படுத்துவதற்கும், தேசத்திற்கு அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பைக் கொண்டாடுவதற்கும் ஆன நோக்கத்தைக் கொண்டுள்ளது. இந்நிகழ்வில் 20 விருதுப் பிரிவுகளில் 50 க்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டன. இதில் பாடசாலை மாணவர்கள், இளம் தொழில்முயற்சியாளர், பாடசாலைகள், ஸ்தாபனங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கான விருதுகள் அடங்கியுள்ளன.

இந்த விருது குறித்து கருத்து தெரிவித்த **யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளத்துறைப் பணிப்பாளரான அனன்யா சபர்வால்** அவர்கள், *"நாட்டில் இளையோரை மேம்படுத்துவதற்கு நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதைப் பெறுவதில் நாங்கள் உண்மையிலேயே பணிவடைகிறோம். யூனிலீவரில், பட்டதாரி மாணவர்களுக்கு உதவும் நெகிழ்வான மற்றும் குறுகிய கால இளையோர் சார்ந்த முயற்சிகளை நாங்கள் வழங்குகிறோம். எனவே, அவர்கள் பட்டம் பெறுவதற்குள், அவர்கள் ஏற்கனவே தங்கள் தொழில் வாழ்க்கைக்கு வலுவான அத்திவாரத்தை இடுவதற்குத் தேவையான முக்கிய திறன்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவன அனுபவ வெளிப்பாடு ஆகியவற்றைப் பெற்றுள்ளனர். எங்களுடைய சொந்த பணியாளர்களே, திறமைசாலிகளை தேடிக் கண்டறிவதில், பல்கலைக்கழக அமர்வுகளை நடத்துவதற்கும், பட்டதாரி மாணவர்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் தங்கள் நேரத்தை தாமாக முன்வந்து யூனிலீவரின் இளையோர் முதலீட்டுக்கு கூட்டாக பங்களிக்கின்றனர். இந்த வகையான நிகழ்நேர தொழில் அனுபவப் பகிர்வு, உண்மையில் இளையோருக்கு அவர்கள் விரும்பும் தொழிலை தீர்மானிக்க இடமளிக்கிறது,"* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் ஸ்ரீலங்கா 2025 ஆம் ஆண்டளவில் 100,000 இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு அத்தியாவசிய திறன்களுடன் அவர்களை வலுவூட்டுவதற்கும் பண்படுத்துவதற்கும் உறுதியளித்துள்ளதுடன் மற்றும் ஏற்கனவே 30,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டு இளைஞர், யுவதிகளை தனது பல்கலைக்கழக ஈடுபாடுகள், மூலோபாய தொழில்துறை - கல்விசார் மாணவர் கூட்டாண்மைகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் மூலம் வேலைவாய்ப்கை மேம்படுத்துவதற்கு ஏற்கனவே வலுவூட்டி, உதவியுள்ளது. இளையோர் சார்ந்த அதன் சில முயற்சிகளில், அதன் SPARKS மாணவர் தூதுவர் திட்டமும் அடங்கும். இது, இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகங்களின் பட்டதாரி மாணவர்களை தங்கள் பல்கலைக்கழகங்களுக்குள் யூனிலீவர் தூதுவர்களாக மாறுவதற்கு அழைப்பு விடுகிறது. மற்றுமொரு திட்டமான Unilever Challenge என்பது ஒரு நிகழ்நேர, வர்த்தகநாம மையப்படுத்தப்பட்ட, ஆய்வுக் கற்கைப் போட்டியாகும், இது முன்னணி வர்த்தகநாமங்களுடன் இணைந்து பணிபுரிவதிலும், முற்றிலும் மாறுபட்ட ஒரு சிந்தனையை வளர்ப்பதிலும் நேரடி அனுபவத்தை அளிக்கிறது. Unilever Leadership Internship Programme எனப்படும் உள்ளகப்

பயிற்சித் திட்டமானது அனைத்து பணித்துறைகளிலும் பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சி அடிப்படையிலான வேலைவாய்ப்புக்களை வழங்குகிறது. மேற்குறிப்பிட்டவற்றை விட மேலும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இந்த ஆண்டு, நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களில் 48% பேர் முகாமைத்துவ நிர்வாக அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கான தொழிற்துறைகளுக்கு இடையிலான கோடை கால உள்ளகப் பயிற்சியான 'Fast-Track' எனும் நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடங்குவதற்கு இந்நிறுவனம், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் லண்டன் பங்குச்சந்தை (London Stock Exchange) ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. அத்துடன், இலங்கை இளையோர்களின் ஆற்றல்மிக்க திறன்களை வளர்ப்பதற்கு உதவுவதற்காக CIMA, the Sri Lanka Institute of Information Technology (SLIIT), ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU), AIESEC Sri Lanka மற்றும் Gavel clubs ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

**~முற்றும்~**